# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2038/34 - 2017 සැප්තැම්බර් මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.09.28

*2038/34 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு பண்டாரவளை - தியதலாவை நீர் வழங்கல் கருத்திட்டத்தின் மாரபெத்த பிரதான நீர் சேகரிப்புத் தொட்டியை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை எடுத்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக் காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*இல. 35, லக்திய மெதுர,*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*
*2017, செத்தெம்பர் 25.*

*5/2/1/1293*



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

பதுளை மாவட்டத்தில், பண்டாரவளை பிரதேச செயலகப் பிரிவில், இல. 67 N, அயிஸ்லெப் வத்த கிராம அலுவலர் பிரிவில், அயிஸ்லெப் வத்த, கேஷன் பிரிவு கிராமத்தில் அமைந்துள்ள அயிஸ்லெப் வத்த கேஷன் பிரிவு என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து 02 றூட் விஸ்தீரணமுடைய காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : தேயிலைத் தோட்டத்திலிருந்து பிரதான பாதை வரையான வீதி;
கிழக்கு : தேயிலைத் தோட்டம் - கேஸன் பிரிவு;
தெற்கு : தேயிலைத் தோட்டத்திலிருந்து பிரதான பாதை வரையான வீதி ;
மேற்கு : குறித்த காணியின் எஞ்சிய பகுதி.
காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும்:

பிரதம நிறைவேற்று அதிகாரி,
வரையறுக்கப்பட்ட மல்வத்தை பெருந்தோட்ட நிறுவனம்,
அயிஸ்லெப் வத்த,
பண்டாரவளை.

10 - 365

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.